# முக்காலம் நமதென்று முரசுகள் முழங்கட்டும்!
# எக்காளம் கேட்டு இமயமே அதிரட்டும்!

கனிமப் பொருள் விளையும்
கவின்மிகு மாவட்டம்
முக்கனியில் முதற்கனியாம்
மாங்கனி
காய்த்துக் குலுங்கும்
கனிவான மாவட்டம்

கோட்பாட்டு வேங்கைகளால்
கொள்கைக் கோளரிகளால்
குலுங்கப் போகிறது
வரும் 21 ஆம் தேதி!

கம்பீரம் மிகுந்த
கழகக் காளைகளின்
கனல் முழக்க
காந்த அலைகளின்
கொதிப்பில்,
தங்கக் குழம்பாகத்
தகிக்கப் போகிறது..
சேலம்!
திகைக்கப் போகிறது
ஞாலம்!

இருட்டைக் கிழித்து
இதயங்கள் தோறும்
வெளிச்சக் கதிர்களை
விதைக்கவே பிறந்த
ஒரு
விஞ்ஞான இயக்கத்தின்
வீரியத் தலைமுறை,
கொடிகட்டிக் கொண்டு
குவியப் போகிறது..
பெத்தநாயக்கன் பாளையத்தில்!

காவியக் களங்கண்ட
கலைஞரெனும் பெருந்தகை
வரைந்து மகிழ்ந்த
உயிரோவியமாம் நம்
உத்தமத் தலைவர்,
தன்மானச் சிகரத்தின்
தளபதியார் அவர்களின்
அன்பான அழைப்பில்
தழைக்கப் போகிறது
தத்துவங்களின் மாநாடு!

குணங்களின் களஞ்சியம்
கொள்கைகளின் அரண்மனை
பகுத்தறிவுப் பாசறை
பண்பாட்டின் ஆலயம்
திராவிடத் திரவியம்
தீந்தமிழ்ப் பாவியம்
என்னும்

தகவுரைகள் அனைத்துக்கும்
தக்கவராய் விளங்கும் நம்
தளபதியார் அவர்களின்
புகழ் மகுடத்தில்
புது வைரம் பதிக்கும்
புதுயுகம் படைக்கும்
பொற்கால மாநாடு இது.

சித்தாந்தக் குகையில்
சீறி நிற்கும்.. ஒரு

சிங்கக் குருளையாய்
சிலிர்த்து விளையாடும்
உதயநிதி என்னும்
உற்சாக மித்திரன்
உழைப்பின் புத்திரன்
ஆற்றலை வெளிப்படுத்தப்
போகும்
அரசியல் மாநாடு இது!

மாண்புமிகு நம் தலைவர்
வாய்மலர்ந்தாற் போல,
'கடல் இல்லாச் சேலத்தில்
கறுப்பு சிவப்புக் கடல்
காணீர்' என்று
இந்தியத் திருநாடே
இறும்பூது எய்தத்தான் போகிறது!

'மன்னவரும் இவரோ!
மாநிலத்தின் அரணாகும்
சின்னவரும் இவரோ!'
என்று
செப்பமுடைய
செந்தமிழ் வாணர்கள் அனைவரும்
ஒப்பரிய மக்கள் வெள்ளத்தின்
உள்ளிருந்து
ஓங்காரக் குரலெழுப்பி
உரைக்கத்தான் போகிறார்கள்.

இந்தத் தரைக்கு
இத்தனை
தலைகளா?
இவை
கறுப்பாய் இருக்கும்
முடிமுளைத்த மலைகளா?
என்று
மலைக்கப் போகிறது
மாநிலம்!

விதை நெல்லாய் இருக்கும்
வீரர்களே இவரென்றால்
கழகம் என்னும்
கழனியில் விளைந்திருக்கும்
தொண்டர்கள் எத்தனை பேர்
என்று
துவண்டுவிழப் போகின்றன
துக்கடாக் கட்சிகள்!

வாய்சுழற்றும் வல்லமையைவிட
வாள்சுழற்றும் வல்லமை
பெரிதென்று
காட்டிய தமிழ்க் குலம்
ஈட்டி வைத்திருக்கும்
இறுதிப்படை
இலட்சியத்தில் இருந்து
எள்முனையும் நெகிழாத
உறுதிப்படை
குறிக்கோள் வெல்லக்
குருதியைக் கூடக்
கொட்டிக் கொடுக்கும்
பருதிப்படை
அறுதிப் பெரும்பான்மை
அறிஞர்கள் ஏத்தும்
அறிவுப்படை



அத்தனையும் திரண்டு
அணிவகுத்து நிற்கும்
அலங்காரம் கண்டு
அகங்கார அரசியல்
மிரண்டு
அதிரத்தான் போகிறது!

ஆர்க்கின்ற பெரும் படையா
அச்சத்தைத் தரும் படையாஇது
ஈரோட்டுக் கரும் படையா
இளம்புலியாய் வரும் படையா

**டாக்டர்**
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்



அறைகூவல் விடும் படையா
ஆணவத்தைச் சுடும் படையா
கலைஞரின் தமிழ்ப் படையா இது
தளபதியின் தனிப் படையா

உதயநிதி விடும் படையா
உச்சத்தைத் தொடும் படையா
உடன்பிறப்பு எனும் படையா
இல்லை
ஒட்டுமொத்த இனப் படையா!
என்று

காலத் தச்சன்
கணிக்கவே முடியாமல்
கலங்கிப்போய் நிற்கும் அளவுக்கு
கவனம் பெறப்போகிற
கருத்தியல் மாநாடு இது!

கூடுவதற்காக வருகிற
கூட்டத்தின் சேர்க்கையாகவோ
அல்லது செயற்கையாகவோ
அமையப் போகிற
மாநாடு அல்ல இது!

இயற்கையாக நிகழ்கின்ற
மகரந்தச் சேர்க்கை போல
மகிழ்நிறைய மக்களின்
மனங்களின் சேர்க்கையில்
மலர்கின்ற மாப்பெரிய
மாநாடு இது!
அன்புப் பிழம்பாக
அமைதியின் அரும்பாக
கட்டிக் கரும்பாக
கருத்தில் இரும்பாக
ஆட்சி நடத்திவரும் நம்
அருமைத் தலைவரின்
ஆகாயம் அளாவிய
மாட்சிக்கான சாட்சியாய்
மையங் கொண்டிருக்கும்
மாநாடு இது!

இளைஞர் உலகத்தின்
எழுச்சி நாயகன்
கலைஞரின் பேரன்
காவிரி நாடன்
தளபதியின் வடிவாகத்
தாவிவரும் தீரன்

இதயநதி குளிர்ந்தோட
இனியமுகம் மலர்ந்தாட
புதியவிதி செயவந்து
புகுந்தாடும் வீரன்
உதயநிதி என்னும்
தமிழர்களின் தோழன்
கட்டிச் சமைத்திருக்கும்
கழக இளைஞரணி
மாநாடு இது!

சித்திரம் போல் சிரித்து
சிட்டுக் குருவி போல் பறந்து
வித்தைகளில் தேர்ந்து
விளையாட்டில் உயர்ந்து
பத்திரமாய் நகர்ந்து
பணிவோடு வளர்ந்து
முத்திரைகள் பதிக்கும்
முதல் அமைச்சாய் சிறந்து
நித்திலமாக
நிமிர்ந்து நிற்கும்
உதயநிதி ஸ்டாலின் அவர்களின்
உன்னதம் மிகுந்த
உழைப்பின் வண்ணமாய்
உருவாகி நடக்கும்
உணர்ச்சிமிகு மாநாடு இது.

ஆற்றும் தொண்டால்
மாற்றார் பலரும்
போற்றும் படியாய்த்
தோற்றம் கொண்ட
தோன்றல், எம் இளையர்
தூய மனத்தர்,

ஈன்றவர் தம்மையும்
ஏந்திய கரங்களில்
இணைந்தவர் தம்மையும்
ஏங்க விடாமல்,
ஏறா நிலைமிசை
ஏறிக் கொண்டிருக்கும்
இளைஞர் உலகத்தின்
ஏந்தல்

உதயநிதி ஸ்டாலின் அவர்களின்
உள்ளத்து வெளிப்பாடுதான்,
தென்னகத்தின் திருப்புமுனையாய்
அமையப் போகும் இந்தச்
சீர்மிகு மாநாடு!

இந்தியாவைப் புதுப்பிக்கும்
இனிய முயற்சியில்
முந்தைய அரசியல்
முதிர்ச்சிகளின் பிம்பமாய்
முந்தி நடந்துவரும்
முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்
என்னும்
செந்தமிழ்க் கோவேந்தின்
சீரிய பார்வையில்

எங்கள்
சிங்கக் குருளையின்
செம்மாப்பு வெல்லட்டும்!

தங்கத் தளபதியின்
தனயன் திறம் உயரட்டும்!

'எங்கள் பகைவர்
எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள்
எழுச்சியைக் கண்டே'
என்று தமிழ்ப்பண்கள்
எங்கெங்கும் ஒலிக்கட்டும்!

கரைமீறி வந்து
காண்கின்ற கடலோ இது
கால்கொண்டு நடக்கின்ற
மாமனிதத் திடலோ!
கழகமெனும் உயிருக்கு
இத்தனை இத்தனை உடலோ!
என்று
ஆச்சரியம் பூச்சொரிய
அகிலமே வியக்கட்டும்!
அண்ணா கலைஞரின்
அழியாத ஆன்மாக்கள்
மகிழ்ச்சியில் திளைக்கட்டும்!

ஆடவர் திலகமாய்
ஆளும் தளபதியின்
ஆட்சி எல்லைகள்
அனுமனின் வாலாய் நீளட்டும்!

உதயநிதி ஸ்டாலின் எனும்
ஒப்பற்ற ஆளுமையை
உயரும் இமைகளுடன்
உலகமே நோக்கட்டும்!

முக்காலம் நமதென்று
முரசுகள் முழங்கட்டும்!
எக்காளம் கேட்டு
இமயமே அதிரட்டும்!

உருக்காலை மாவட்டம்
செருக்கோடு நிமிரட்டும்!
உள்ளத்தின் உணர்ச்சிப்
பெருக்கோடு மகிழட்டும்!



சேலத்தில் இன்று நடைபெறும் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டை முன்னிட்டு நாகையிலிருந்து 25க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் நாகையில் இருந்து சேலத்திற்கு பைக்கில் பிரச்சார பேரணியை தொடங்கினர். பிரச்சார பேரணியை நாகை மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் தலைஞாயிறு ஒன்றிய கழகச் செயலாளர் மகா குமார் மற்றும் பலர் உள்ளனர்

## சென்னை குடிநீர் ஏரிகளின்
# நீர் இருப்பு நிலவரம்!

*சென்னை, ஜன. 21-*
*புழல் ஏரிக்கு வினாடிக்கு 26 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 3,300 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் தற்போது 2,821 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. சென்னை குடிநீருக்காக 159 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் 5 முக்கிய ஏரிகளில் 87.49 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. 5 முக்கிய ஏரிகளின் மொத்த கொள்ளளவான 11.757 டி.எம்.சி.யில் 10.286 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது. செம்பரம்பாக்கம்85.1%; புழல் 85.48%; பூண்டி95.23%; சோழவரம் 73.08%; கண்ணன்கோட்டை ஏரி99.2% நீர் இருப்பு உள்ளது.*



கரூர் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டச் செயலாளரும் தமிழ்நாடு அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. அவைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சக்திவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள், எம் எஸ்.கே. கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி , பரத், மாநில நிர்வாகிகள் பரணி மணி , கரூர் முரளி, முனவர் ஜான், பல்லவி ராஜா, வழக்கறிஞர் விஜயகுமார், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி கழக பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, அணி செயலாளர்கள் கலந்து கொண்டனர். தீர்மானத்தின்படி, சேலம் இரண்டாவது இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு கரூர் மாவட்டத்தில் இருந்து 202 பேருந்துகளில் இருந்து 10,000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் புறப்பட்டுச்சென்றனர். மாநாட்டில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க 50 இருசக்கர வாகனங்களில் இளைஞர் அணியினர் புறப்பட்டனர்.